*சபையின் அனுமதியைப் பொறுத்து செலவினத்திற்கு அதிகாரமளித்தல்.*

30. இப்பாகத்தின் முற்போந்த ஏற்பாடுகளில் உள்ள எதுவும் எப்படி இருப்பினும் மாகாண சபையினால் அத்தகைய செலவினத்தின் அனுமதியைப் பொறுத்து, மாகாணத்தின் மாகாண நிதியத்தின் அமைப்புத் தேதி தொடக்கம் ஆறு மாதங்களுக்கு மேற்படாத ஒரு காலத்திற்குத் தேவையென அவர் கருதுகின்றவாறாக, மாகாணத்தின் மாகாண நிதியத்தில் இருந்து அத்தகைய செலவை ஆளுநர் அதிகாரமளிக்கலாம்.

## பாகம் IV

### மாகாணப் பகிரங்க சேவை ஆணைக்குழு

*பிரதான செயலாளர்.*

31. சனாதிபதியானவர் அம்மாகாணத்தின் பிரதான அமைச்சரின் ஒருப்பாட்டுடன் ஒவ்வொரு மாகாணத்திற்கும் பிரதான செயலாளரை நியமித்தல் வேண்டும்.

*மாகாணப் பகிரங்க சேவை.*

32. (1) வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக, ஒவ்வொரு மாகாணத்தினதும் மாகாணப் பகிரங்க சேவையின் அலுவலர்களின் நியமனம், இடமாற்றம், பதவிநீக்கம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு என்பன இத்தால் மாகாண ஆளுநருக்கு உரித்தாக்கப்படுகின்றன.

(2) ஒரு மாகாணத்தின் ஆளுநர், காலத்திற்குக் காலம் மாகாணப் பகிரங்க சேவையின் அலுவலர்களின் நியமனம், இடமாற்றம், பதவிநீக்கம் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு ஆகிய அவரது தத்துவங்களை அம்மாகாணத்தின் மாகாண பகிரங்க சேவை ஆணைக்குழுவிற்குக் கையளிக்கலாம்.

(3) ஆட்சேர்த்தல் செயல்திட்டங்களையும் அத்தகைய அலுவலர்களுக்கான நடத்தைக் கோவைகளையும் பதவியேற்றங்களையும் இடமாற்றங்களையும் செய்யும்போது பின்பற்றப்படவேண்டிய நெறிகளையும் அத்தகைய அலுவலர்களின் நியமன, இடமாற்ற, பதவிநீக்க, ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுத் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கும் கையளிப்பதற்குமான நடவடிக்கை முறைகளை வகுப்பாக்கம் செய்தல் உட்பட மாகாணப் பகிரங்க சேவையின் அலுவலர்கள் தொடர்பான எல்லாக் கருமங்களுக்கும் ஆளுநர் ஏற்பாடு செய்தல் வேண்டும் என்பதுடன், அவற்றைத் தீர்மானித்தலும் வேண்டும். அத்தகைய ஆட்சேர்த்தல் செயல் திட்டங்களையும், நடத்தைக் கோவைகளையும் வகுப்பாக்கம் செய்கையில் ஆளுநர் சாத்தியமாகக்கூடியவாறு பகிரங்க சேவையிலுள்ள நேரொத்த அலுவலர்களுக்கு விதித்துரைத்த ஆட்சேர்த்தல் செயல் திட்டங்களையும் பகிரங்க சேவையின் நேரொத்த பதவிகளை வகிக்கும் விதித்துரைக்கப்பட்ட நடத்தைக் கோவைகளையும் பின்பற்றுதல் வேண்டும்.

*மாகாணப் பகிரங்க சேவை ஆணைக்குழு.*

33. (1) ஒவ்வொரு மாகாணத்திற்கும் மாகாணப் பகிரங்க சேவை ஆணைக்குழு ஒன்று இருத்தல் வேண்டும். இம்மாகாண பகிரங்க சேவை ஆணைக்குழு அம்மாகாணத்தின் ஆளுநரால் நியமிக்கப்பட்ட மூன்று ஆட்களுக்குக் குறையாத ஆட்களைக் கொண்டிருத்தல் வேண்டும். ஆளுநர் ஆணைக்குழுக்களின் உறுப்பினர்களில் ஒருவரைப் பெயர்குறித்து தவிசாளராக நியமித்தல் வேண்டும்.

(2) பாராளுமன்ற உறுப்பினர் ஒருவராக, மாகாணசபை உறுப்பினர் ஒருவராக, பகிரங்க அலுவலர் ஒருவராக, நீதிமுறை அலுவலர் ஒருவராக அல்லது ஒரு மாகாணப் பகிரங்க சேவையின் அலுவலராக இருக்கும் எந்த ஆளும் ஒரு மாகாண பகிரங்க சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவராக நியமிக்கப்படுதலோ அல்லது ஒரு மாகாணப் பகிரங்கசேவை ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவராகத் தொடர்ந்து இருத்தலோ ஆகாது.